திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஊமை, செவிடர்களுக்காக கிருத்துவ மதத்தால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு அரசாங்கம் ஏதாவது மானியம் கொடுக்கிறதா? அப்படிக் கொடுக்கிறது என்றால் ஒவ்வொரு மாண வனுக்கும் எந்த விகிதாசாரத்திலே மானியம் கொடுக்கிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர வர்களே, அரசினுடைய உதவி பெற்று நடத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பள்ளிகளுக்கு அரசு மானியம், மலைவாசி பகுதியில் படிக்கும் மாணவர்களுக்கு அரசால் ஒரு மாணவனுக்கு 18 ரூபாய் வீதமும், சென்னை போன்ற பகுதிகளில் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு மாணவனுக்கு 14 ரூபாயும், இதர பகுதிகளில் படிக்கும் மாண வர்களுக்கு ஒரு மாணவனுக்கு 13 ரூபாய் வீதமும் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. சோணையா: தலைவரவர்களே, மானாமதுரையில் நடை பெறும் ஊமை, செவிடர் பள்ளியில் நிதிநிலைமை சரியில்லை. அதன் மேல் அமைப்புகளிலிருந்தும் போதுமான நிதி வராததால் அது சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறது என்பது அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்குத் தெரிய வந்து, அரசுக்கும் நான் கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகவே, அதற்கு மானியத் தொகை கொடுத்து, அதைக் கலைத்து விடாமல் இருக்க அரசு உறுதி அளிக்குமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவ ரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப் படும்.

பெரம்பலூர் பேரூராட்சியில் ஆயில் என்ஜின் வாங்கல்

***198 வினு.—டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரம்பலூர் பேரூராட்சியில் குடிதண்ணீர் வழங்குதலுக் கென 7½ எச்.பி. கொண்ட ஆயில் இன்ஜின் வாங்க ரூ. 11,000 அண்மையில் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தொட்டியில் குடிநீர் விநியோகத்தை அதிகப்படுத்துவதற்கென, பெரம்பலூர் பேரூராட்சியின் தீர்மானத்திற்கிணங்க, ஊராட்சியின் நிதியிலிருந்து 7.5 குதிரை சக்தி ஆயில் என்ஜின் ஒன்று ரூ. 8,195-க்கு இராஜாமணி ஏஜென்சீஸ் நிறுவனத்தாரிடமிருந்து வாங்கப்பட்டுள்ளது.

பழயாற்றின் குறுக்கே பாலம்

*199 வினா.—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுக்கா, தாமரைகுளத்தையும், குந்குரும்பொத்தையையும் இணைக்கும் விதத்தில் பழயாற்றின் மீது ஒரு பாலம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

எல்லாபுரம், கும்முடிப்பூண்டி ஒன்றியங்களில் கிராமச்சாலைப் பணிகள்

*200 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும், கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், 1500 மக்கள் தொகையிருந்தும் இன்னும் கிராமச்சாலைத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த எடுத்துக்கொள்ளப் படாத சாலைகள் எவை, எவை?

(இ) இவை எப்பொழுது கிராமச்சாலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.